
2021-22 EDITION

SURA'S

9TH STD CBSE GUIDES




Updated New Edition

Call @
9600175757
8124201000
orders@surabooks.com

Buy Online @ surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores

# சுராவின்

# தமிழ் உரைநூல்

# CBSE

தமிழ்நாடு அரசு பாடநூல் அடிப்படையில்

## 9 ஆம் வகுப்பு

**சிறப்பம்சங்கள்**

- ❖ புதிய பாடதிட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- ❖ CBSE மாதிரி வினாத்தாள் அடிப்படையில் இலக்கணப் பகுதி வினாக்கள், விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- ❖ இலக்கணம் எளிதில் புரிந்து கொள்ள மனவரைபடங்கள் தரப்பட்டுள்ளன.
- ❖ மதிப்பீடு, பொதுப்பத்தி வினாக்கள் மற்றும் விடைகள், மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைதல், கடிதங்கள், பொதுக் கட்டுரைகள், இலக்கணம் கூடுதல் வினா விடைகள், அலகுத் தேர்வுகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- ❖ CBSE மாதிரி வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

www.surabooks.com

Click Here: https://bit.ly/3qEjvjl  Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores

**2021-22** பதிப்பு
© வெளியீட்டாளர்கள்

ISBN : **978-93-5330-222-1**
**குறியீட்டு எண் : CB9_01**

**எழுதி வழங்கியவர்கள்**
**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,

**தலைமை அலுவலகம்:**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 91-44-4862 9977, 4862 7755
81242 01000/ 81243 01000
வாட்ஸ்அப்: 8124201000
**e-mail :** orders@surabooks.com,
**website :** www.surabooks.com

**Our Guides for XI, XII Standard**

- Sura's Tamil
- Sura's English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available 1 Mark Q & A (EM/TM),2,3 Marks (EM/TM) and 5 Marks Q & A (EM / TM) for all Subjects.

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 80562 94222 / 80562 15222
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



Click Here: https://bit.ly/3qEjvjI    Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores

# பதிப்பாசிரியர் உரை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக. – திருவள்ளுவர்**

**எங்கள் வாழ்த்திற்குரிய**
**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் CBSE தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** ஒன்பதாம் வகுப்பிற்கான **CBSE தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீடு, இலக்கணம் கூடுதல் வினா விடைகள், பிற்சேர்க்கைப் பகுதி ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த CBSE தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**

**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)



Click Here: https://bit.ly/3qEjvjI Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | மொழி<br>**அமுதென்று பேர்** | திராவிட மொழிக்குடும்பம் (உரைநடை) | 1-26 |
| | | தமிழோவியம் (செய்யுள்) | |
| | | தமிழ்விடு தூது (செய்யுள்) | |
| | | வளரும் செல்வம் (துணைப்பாடம்) | |
| | | தொடர் இலக்கணம் (இலக்கணம்) | |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல்<br>**உயிருக்கு வேர்** | நீரின்றி அமையாது உலகு (உரைநடை) | 27-51 |
| | | பட்டமரம் (செய்யுள்) | |
| | | பெரியபுராணம் (செய்யுள்) | |
| | | புறநானூறு (செய்யுள்) | |
| | | தண்ணீர் (துணைப்பாடம்) | |
| | | துணைவினைகள் (இலக்கணம்) | |
| 3. | பண்பாடு<br>**உள்ளத்தின் சீர்** | ஏறுதழுவுதல் (உரைநடை) | 52-78 |
| | | மணிமேகலை (செய்யுள்) | |
| | | அகழாய்வுகள் (துணைப்பாடம்) | |
| | | வல்லினம் மிகும் இடங்கள் (இலக்கணம்) | |
| | | திருக்குறள் (வாழ்வியல்) | |
| 4. | அறிவியல், தொழில்நுட்பம்<br>**எட்டுத்திக்கும் சென்றிடுவீர்** | இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும் (உரைநடை) | 79-98 |
| | | ஓ, என் சமகாலத் தோழர்களே!<br>உயிர்வகை (செய்யுள்) | |
| | | விண்ணையும் சாடுவோம் (துணைப்பாடம்) | |
| | | வல்லினம் மிகா இடங்கள் (இலக்கணம்) | |
| 5. | கல்வி<br>**கசடற மொழிதல்** | கல்வியில் சிறந்த பெண்கள் (உரைநடை) | 99-121 |
| | | குடும்ப விளக்கு (செய்யுள்) | |
| | | சிறுபஞ்சமூலம் (செய்யுள்) | |
| | | வீட்டிற்கோர் புத்தகசாலை (துணைப்பாடம்) | |
| | | இடைச்சொல் - உரிச்சொல் (இலக்கணம்) | |


www.surabooks.com



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 6. | கலை, அழகியல், புதுமைகள்<br>**கலை பல வளர்த்தல்** | சிற்பக்கலை (உரைநடை) | 122-158 |
| | | இராவண காவியம் (செய்யுள்) | |
| | | நாச்சியார் திருமொழி (செய்யுள்) | |
| | | செய்தி (துணைப்பாடம்) | |
| | | புணர்ச்சி (இலக்கணம்) | |
| | | திருக்குறள் (வாழ்வியல்) | |
| 7. | நாகரிகம், தொழில், வணிகம், நாடு, சமூகம், அரசு, நிருவாகம்<br>**வாழிய நிலனே** | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு (உரைநடை) | 159-185 |
| | | சீவக சிந்தாமணி (செய்யுள்) | |
| | | முத்தொள்ளாயிரம் (செய்யுள்) | |
| | | மதுரைக்காஞ்சி (செய்யுள்) | |
| | | சந்தை (துணைப்பாடம்) | |
| | | ஆகுபெயர் (இலக்கணம்) | |
| 8. | அறம், தத்துவம், சிந்தனை<br>**என்தலைக் கடனே** | பெரியாரின் சிந்தனைகள் (உரைநடை) | 186-215 |
| | | ஒளியின் அழைப்பு (செய்யுள்) | |
| | | தாவோ தே ஜிங் (செய்யுள்) | |
| | | யசோதர காவியம் (செய்யுள்) | |
| | | மகனுக்கு எழுதிய கடிதம் (துணைப்பாடம்) | |
| | | யாப்பிலக்கணம் (இலக்கணம்) | |
| 9. | மனிதம், ஆளுமை<br>**அன்பெனும் அறனே** | விரிவாகும் ஆளுமை (உரைநடை) | 216-237 |
| | | அக்கறை (செய்யுள்) | |
| | | குறுந்தொகை (செய்யுள்) | |
| | | தாய்மைக்கு வறட்சி இல்லை (துணைப்பாடம்) | |
| | | அணியிலக்கணம் (இலக்கணம்) | |
| | | **பிற்சேர்க்கை**<br>❖ காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல்<br>❖ பொதுப்பத்தி வினாக்கள் மற்றும் விடைகள்<br>❖ கடிதங்கள் ❖ பொதுக் கட்டுரைகள் ❖ மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுதல் | 238-270 |
| | | CBSE மாதிரி வினாத்தாள் | 271-274 |




Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores

# தமிழ்

## CBSE ஒன்பதாம் வகுப்பு

## வினாத்தாள் வடிவமைப்பு மற்றும் நேரப் பங்கீடு முறை

| வ.எண் | தலைப்பு | வினா | மதிப்பெண் | மொத்தம் | எழுதும் நேரம் | திருப்புதல் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| | | | **பிரிவு - அ** | | | |
| 01 | பத்தி வினா – 1 | 5 | 5 × 1 | 5 | 10 நிமிடம் | 08 நிமிடம் |
| 02 | பத்தி வினா – 2 | 5 | 5 × 1 | 5 | 10 நிமிடம் | |
| 03 | சான்று தருக | 4 | 4 × 1 | 4 | 05 நிமிடம் | |
| 04 | நிரப்புக | 4 | 4 × 1 | 4 | 05 நிமிடம் | |
| 05 | கூறியவாறு செய்க | 4 | 4 × 1 | 4 | 05 நிமிடம் | |
| 06 | இலக்கணக் குறிப்பு தருக | 4 | 4 × 1 | 4 | 05 நிமிடம் | |
| 07 | செய்யுள் பொருளுணர் திறன் | 5 | 5 × 1 | 5 | 05 நிமிடம் | |
| 08 | பத்தி வினா (உரைநடை) | 5 | 5 × 1 | 5 | 10 நிமிடம் | |
| 09 | குறட்பாக்களை சீர்களால் நிரப்புக | 4 | 1 × 4 | 4 | 05 நிமிடம் | |
| | | | **பிரிவு - ஆ** | | | |
| 10 | செய்யுள் விரிவான வினா | 2 | 2 × 3 | 6 | 10 நிமிடம் | |
| 11 | உரைநடை விரிவான வினா | 3 | 3 × 4 | 12 | 20 நிமிடம் | |
| 12 | விரிவானம் (துணைப்பாடம்) | 1 | 1 × 7 | 7 | 20 நிமிடம் | 12 நிமிடம் |
| 13 | படம் கருத்து எழுதுதல் | 1 | 1 × 3 | 3 | 05 நிமிடம் | |
| 14 | கடிதம் | 1 | 1 × 6 | 6 | 20 நிமிடம் | |
| 15 | பொதுக்கட்டுரை | 1 | 1 × 6 | 6 | 25 நிமிடம் | |
| | | | | | 160 | 20 |

www.surabooks.com



Click Here: https://bit.ly/3qEjvjl
Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 1

அமுதென்று பேர் | உரைநடை

# திராவிட மொழிக்குடும்பம்

## மதிப்பீடு

### பலவுள் தெரிக

**1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

| குழு-1 | குழு-2 | குழு-3 | குழு-4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| ................ | ......................... | .................. | ..................... |

அ) 1-வங்கம், 2-மானு, 3-தாழிசை, 4-பிறவினை

ஆ) 1-தாழிசை, 2-மானு, 3-பிறவினை, 4-வங்கம்

இ) 1-பிறவினை, 2-தாழிசை, 3-மானு, 4-வங்கம்

ஈ) 1-மானு, 2-பிறவினை, 3-வங்கம், 4-தாழிசை

**விடை: அ) 1-வங்கம், 2-மானு,3-தாழிசை, 4-பிறவினை**

### குறுவினா

**1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?**

நாங்கள் பேசும் மொழி தமிழ். அம்மொழி இந்திய மொழிக் குடும்பத்தில் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.

### சிறுவினா

**1. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

மொழிகள் பரவிய நில அடிப்படையில் திராவிட மொழிகள் மூன்று வகைப்படும். அவை, தென் திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள்.

**தமிழ் :**

(i) திராவிட என்னும் சொல்லே தமிழ் என்னும் சொல்லில் இருந்து உருவானதே ஆகும்.

(ii) தமிழ் தொன்மையும் இலக்கண இலக்கியவளமும் உடையது.

(iii) திராவிட மொழிகளுள் பிற மொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படுகிறது.

(iv) ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் பெற்ற மொழி.

**2. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?**

திராவிட மொழிகளுக்கெனச் சில பொதுப் பண்புக்கூறுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்றுபோலவே அமைந்துள்ளதைப் பார்க்கலாம்.

(i) மூன்று – தமிழ்

(ii) மூணு – மலையாளம்

(iii) மூடு – தெலுங்கு

(iv) மூரு – கன்னடம்

(v) மூஜி – துளு





Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**3. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?**

(i) திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்தமொழியாகத் திகழ்கின்றது தமிழ். பிற திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது.

(ii) தமிழ் மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது.

(ii) அத்துடன் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.

## நெடுவினா

**1. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்தமொழியாகத் திகழ்கின்றது தமிழ். பிற திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது தமிழ்மொழி என்பதைச் சான்றுகளுடன் காணலாம்.

கால்டுவெல் தமது 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலில் பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி திராவிட மொழிகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகளை எடுத்துரைத்தார்.

திராவிட மொழிகளுக்குச் சில பொதுப்பண்புக் கூறுகள் காணப்படுகின்றன.

(i) **அடிசொல் :**

சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல், அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால் அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருக்கிறது.

| அடிச்சொல் | திராவிட மொழிகள் |
|---|---|
| கண் | தமிழ் |
| கண்ணு | மலையாளம், கன்னடம் |
| கன்னு | தெலுங்கு, குடகு |
| ஃகன் | குரூக் |
| கெண் | பர்ஜி |
| கொண் | தோடா |

(ii) **எண்ணுப் பெயர்கள்:**

மூன்று – தமிழ்    மூணு – மலையாளம்    மூடு – தெலுங்கு

மூரு – கன்னடம்    மூஜி – துளு

(iii) **குறில், நெடில் வேறுபாடு :**

குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

அடி – குறில்    ஆடி – நெடில்    வளி – குறில்

வாளி – நெடில்

(iv) **பால் பாகுபாடு:**

திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு, உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது. அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை, தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர்.

**(எ.கா.)**

| ஆண் | பெண் |
|---|---|
| கடுவன் | மந்தி |
| களிறு | பிடி |



www.surabooks.com



Click Here: https://bit.ly/3qEjvjl
Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



(v) **வினைச் சொற்கள்:**

திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

**(எ.கா)** வந்தான் (உயர்திணை ஆண்பால் படர்க்கை ஒருமை)

தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம் பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுப்பெயர்களும் மூவிடப் பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

இவ்வாறு திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்கு தமிழ் பெருந்துணையாக இருக்கிறது.

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக.**

1. இந்திய நாட்டை மொழிகளின் காட்சிச்சாலை என்றவர் ............. **விடை: ச. அகத்தியலிங்கம்**
2. திராவிட மொழிகள் நான்கினையும் ஒப்புமைப்படுத்தி முதன் முதலில் கருத்து தெரிவித்தவர் ............. **விடை: பிரான்சிஸ் எல்லிஸ்**
3. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் ............. **விடை: கால்டுவெல்**
4. வேர்ச்சொல் என்பது ............. எனப்படும். **விடை: அடிச்சொல்**
5. ............., ............. உள்ளிட்ட நாடுகளில் பணத்தாள்களில் தமிழ்மொழி இடம் பெற்றுள்ளது. **விடை: மொரிசியஸ், இலங்கை**
6. திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும் பால்காட்டும் விகுதிகள் இல்லாத மொழி ......... **விடை: மலையாள மொழி**

**பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 1300க்கும் மேற்பட்டது. இவற்றை நான்கு மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கின்றனர். பல கிளைமொழிகளும் இங்குப் பேசப்படுவதால் இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று ச.அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார். உலகின் குறிப்பிடத்தக்க பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று என்பது மொகஞ்சதாரோ-ஹரப்பா அகழாய்வுக்குப் பின் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி எனப்படுகிறது. திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர்.

**வினாக்கள்**

1. **இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை எவ்வளவு?**
   அ) 1500 ஆ) 1300 இ) 1400 ஈ) 1100 **விடை ஆ) 1300**
2. **இந்திய மொழிகள் எத்தனை மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?**
   அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) நான்கு **விடை ஈ) நான்கு**
3. **இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலை எனக் கூறியவர் யார்?**
   அ) மாக்ஸ் முல்லர் ஆ) ஹோக்கன் இ) அகத்தியலிங்கம் ஈ) குமரிலபட்டர் **விடை இ) அகத்தியலிங்கம்**
4. **இந்திய நாகரிகம் பழைமையான நாகரிகம் என்பதனை உறுதி செய்த அகழாய்வு எது?**
   அ) மொகஞ்சதாரோ – ஹரப்பா ஆ) கீழடி இ) ஆதிச்சநல்லூர் ஈ) அரிக்கமேடு **விடை அ) மொகஞ்சதாரோ- ஹரப்பா**
5. **திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் யார்?**
   அ) ச. அகத்தியலிங்கம் ஆ) கால்டுவெல் இ) குமரிலபட்டர் ஈ) எமினோ **விடை இ) குமரிலபட்டர்**

அமுதென்று பேர்



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. திராவிட மொழிக்குடும்பத்திலுள்ள தமிழ், கன்னடம், மலையாளம் முதலானவை தென்திராவிட மொழிகள் எனவும் தெலுங்கு முதலான சில மொழிகள் நடுத்திராவிட மொழிகள் எனவும் பிராகுயி முதலானவை வடதிராவிட மொழிகள் எனவும் பகுக்கப்பட்டுள்ளன. அவை 24 மொழிகள் ஆகும். இம்மொழிகள் தவிர அண்மையில் கண்டறியப்பட்ட எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆகிய நான்கு மொழிகளையும் சேர்த்துத் திராவிட மொழிகள் மொத்தம் 28 எனக் கூறுவர்.

**வினாக்கள்**

**1. மொழிகள் எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது?**

அ) நிலம் ஆ) மலை இ) மாநிலம் ஈ) பேசும் முறை **விடை அ) நிலம்**

**2. தென் திராவிட மொழி எது?**

அ) கோண்டா ஆ) குரூக் இ) மலையாளம் ஈ) பர்ஜி **விடை இ) மலையாளம்**

**3. பிராகுயி என்பது எம்மொழி?**

அ) தென்திராவிட மொழி ஆ) நடுத்திராவிட மொழி
இ) வட திராவிட மொழி ஈ) சீன திபத்திய மொழி **விடை இ) வட திராவிட மொழி**

**4. கீழ்க்கண்டவற்றுள் அண்மையில் கண்டறியப்பட்ட மொழிகளுள் ஒன்று ............**

அ) தங்கா ஆ) பெங்கோ இ) கொரகா ஈ) கோயா **விடை அ) தங்கா**

**5. திராவிட மொழிகள் மொத்தம் எத்தனை?**

அ) 24 ஆ) 26 இ) 4 ஈ) 28 **விடை ஈ) 28**



**குறுவினா**

**1. நான்கு மொழிக் குடும்பங்கள் யாவை?**

(i) இந்தோ – ஆசிய மொழிகள் (ii) திராவிட மொழிகள்
(iii) ஆஸ்திரோ ஆசிய மொழிகள் (iv) சீனா – திபெத்திய மொழிகள்.

**2. இந்தியா மொழிகளின் காட்சிச்சாலை என அழைக்கப்படுவதன் காரணம் யாது?**

1300க்கும் மேற்பட்ட மொழிகள் இந்தியாவில் பேசப்படுகின்றன. நான்கு வகை மொழிக் குடும்பங்களாக இவற்றைப் பிரிக்கின்றனர். மேலும், இங்குப் பல கிளைமொழிகள் பேசப்படுவதால் இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என ச. அகத்தியலிங்கம் குறிப்பிடுகிறார்.

**3. திராவிட மொழிகளில் சொல் ஒற்றுமை பட்டியல் தருக.**

**திராவிட மொழிகளில் சொல் ஒற்றுமை :**

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | துளு | கூர்க் |
|---|---|---|---|---|---|
| மரம் | மரம் | மானு | மரம் | மர | மர |
| ஒன்று | ஒண்ணு | ஒகடி | ஒந்து | ஒஞ்சி | – |
| நூறு | நூறு | நூரு | நூரு | நூது | – |
| நீ | நீ | நீவு | நீன் | ஈ | நின் |

**4. தென்னிந்திய மொழிகள் எவை என பிரான்சிஸ் எல்லிஸ் கூறுகிறார்?**

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தைப் பிரான்சிஸ் எல்லிஸ் என்பவர் முதன் முதலில் தெரிவித்தார். இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்திய மொழிகள் எனப்பெயரிட்டார்.

**5. கால்டுவெல்லுக்குப் பின்னர் திராவிட மொழிகளை ஆய்வு செய்தோர் யாவர்?**

ஸ்டென்கனோ, கே.வி.சுப்பையா, எல்.வி.இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில் ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சி சுந்தரம்.



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



## சிறுவினா

**1. திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள் யாவை? சான்று தருக.**

திராவிட மொழிகளுக்கெனச் சில பொதுப் பண்புக்கூறுகள் உள்ளன. சொற்களின் முக்கியப் பகுதியான வேர்ச்சொல் என்பது அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

**சான்று :**

| அடிச்சொல் | திராவிட மொழிகள் |
|---|---|
| கண் | தமிழ் |
| கண்ணு | மலையாளம், கன்னடம் |
| கன்னு | தெலுங்கு, கொடகு |
| ஃகன் | குரூக் |
| கெண் | பர்ஜி |
| கொண் | தோடா |

**2. தமிழின் தனித்தன்மைகள் யாவை?**

**தமிழின் தனித்தன்மைகள்:**

(i) தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடையது தமிழ் மொழியாகும்.

(ii) இலங்கை, மலேசியா, பர்மா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிஜித்தீவு ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென் ஆப்பிரிக்கா, மொரிசியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ்மொழி.

(iii) ஏனைய திராவிட மொழிகளை விடவும் தமிழ்மொழி தனக்கெனத் தனித்த இலக்கணவளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழியாகும்.

(iv) திராவிட மொழிகளுள் பிற மொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழேயாகும்.

(v) தமிழ்மொழி திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.

(vi) ஒரேபொருளைக் குறிக்கப் பலசொற்கள் அமைந்த சொல்வளமும், சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழேயாகும்.

(vii) இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.

(viii) தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம்பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுப்பெயர்களும் மூவிடப்பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

**3. திராவிட மொழிகளின் பால்பாகுபாடு குறித்து எழுதுக.**

**பால்பாகுபாடு:**

(i) திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது. ஆனால் வடமொழியில் இவ்வாறு அமையவில்லை.

(ii) உயிரற்ற பொருள்களும் கண்ணுக்கே புலப்படாத நுண்பொருள்களும்கூட ஆண், பெண் என்று பாகுபடுத்தப்படுகின்றன. இம்மொழியில் கைவிரல்கள் பெண்பால் என்றும், கால்விரல்கள் ஆண்பால் என்றும் வேறுபடுத்தப்படுகின்றன.

(iii) ஜெர்மன் மொழியிலும் இத்தகைய தன்மையைக் காணமுடிகிறது. முகத்தின் பகுதிகளான வாய், மூக்கு, கண் ஆகியவை வேறுவேறு பால்களாகச் சுட்டப்படுகின்றன. வாய் – ஆண்பால், மூக்கு – பெண்பால், கண் – பொதுப்பால் எனப் பகுக்கும் நிலை உள்ளது.

(iv) திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது.

(v) அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை.

(vi) தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர். (எ.கா. கடுவன் –மந்தி; களிறு – பிடி)

☆☆☆

அமுதென்று பேர்



Click Here: https://bit.ly/3qEjvjI Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 1

அமுதென்று பேர் | கவிதைப்பேழை

# தமிழோவியம்

ஈரோடு தமிழன்பன்

## பாடல்

காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!
அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் – அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்
நிகரிலாக் காப்பியப் பூவனங்கள் – உன்
நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்! – காலம் பிறக்கும் முன்...
ஏனிவ் விருட்டெனக் கேட்டுவரும் – நீதி
ஏந்திய தீபமாய்ப் பாட்டுவரும்
மானிட மேன்மையைச் சாதித்திடக் – குறள்
மட்டுமே போதுமே ஓதி, நட... – காலம் பிறக்கும் முன்...
எத்தனை எத்தனை சமயங்கள் – தமிழ்
ஏந்தி வளர்த்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் – புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே... – காலம் பிறக்கும் முன்...
விரலை மடக்கியவன் இசையில்லை – எழில்
வீணையில் என்று சொல்வதுபோல்
குறைகள் சொல்வதை விட்டுவிட்டுப் புதுக்
கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்!

– **ஈரோடு தமிழன்பன்**

## நூற்குறிப்பு

ஈரோடு தமிழன்பன் எழுதிய 'தமிழோவியம்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ள கவிதை இது. இக்கவிதை குறித்துக் கவிஞர் முன்னுரையில் "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்து கொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை. பாடலும் அப்படித்தான்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஆசிரியர் குறிப்பு

ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களிலும் படைப்புகளை வெளியிட்டுள்ளார். **ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ** எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார். இவரது **'வணக்கம் வள்ளுவ'** என்னும் கவிதை நூலுக்கு 2004ஆம் ஆண்டுக்கான **சாகித்திய அகாதெமி விருது** வழங்கப்பட்டது. **'தமிழன்பன் கவிதைகள்'** தமிழக அரசின் பரிசுபெற்ற நூல். இவரது கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## பொருள் தருக.

1. புனைந்து – புதிய வடிவம் கொடுத்து
2. நிகரிலா – ஒப்பிலா
3. எழில் – அழகு
4. சித்தர் மரபு – சித்தர் வழி
5. நீதி – நியாயம்
6. தீதறுக்கும் – தீமைகளை நீக்கும்
7. சமயம் – மதம்



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores





### இலக்கணக்குறிப்பு தருக

1. எத்தனை எத்தனை, விட்டுவிட்டு - அடுக்குத்தொடர்கள்
2. ஏந்தி - வினையெச்சம்
3. காலமும் - முற்றும்மை

## மதிப்பீடு

### பலவுள் தெரிக

1. **காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! - எந்தக்**
**காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! ....... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்**

அ) முரண், எதுகை, இரட்டைத் தொடை

ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை

இ) மோனை, எதுகை, இயைபு

ஈ) மோனை, முரண், அந்தாதி

**விடை: இ) மோனை, எதுகை, இயைபு**

### குறுவினா

1. **தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.**

'காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!'

தமிழ் என்றும் நிலையானது நிலைத்த மொழி என்றும் பசுமை மாறா இளமை மாறா மொழி தமிழ் மொழியே என்று தமிழ்மொழியின் அழியாத்தன்மையைக் கூறுவதால் இவ்வடிகள் என்னை ஈர்த்தன.

2. **அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை**
**அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள் - இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை?**

மக்களின் உள்ளத்தில் உள்ள அன்பையும் வாழ்க்கை நிகழ்வுகளையும் கூறும் இலக்கணத்தை அகப்பொருள் என்றும், அகம் சாராத அறம், பொருள், வீடு, கல்வி, வீரம், கொடை, புகழ் முதலியவற்றைக் கூறும் இலக்கணத்தைப் புறப்பொருள் என்றும் அமைந்த இலக்கியம் இலக்கணமாய்த் திகழ்வதை இவ்வரிகள் உணர்த்துகின்றன.

### சிறுவினா

1. **புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.**

(i) பாரதியார் "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும்" என்று பாடியுள்ளார். அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் பிறமொழி நூல்களை நம் தமிழ்மொழியில் மொழி பெயர்ப்பேன்.

(ii) இலக்கியங்களைக் காலக் கண்ணாடி என்றும் கூறுவர். அதனால் இன்றைய காலக் கட்டத்திற்கு நம் மாணவர்களுக்குத் தேவையானவற்றை எளிதில் பொருள் விளங்கக்கூடிய வகையில் நூல்கள் இயற்றுவேன்.

(iii) மாற்றம் ஒன்றே மாறாதது என்பதை உணர்ந்த நாம் தற்கால அறிவியல் வளர்ச்சிக்கேற்றபடி, அத்துறையில் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களுக்குக் கலைச் சொற்களைக் கண்டறிவேன்.

(iv) அறிவியல் சார்ந்த நூல்களை எளிமையான தமிழில் உருவாக்குவேன். இளைஞர்களுக்கு நல்வழிகாட்டும் இலக்கியங்களைப் படைப்பேன். இவ்வாறு தமிழைப் புதுக்கோலம் புனையச் செய்து அதனை வளர்ப்பேன்.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. 'தமிழோவியம்' எனும் கவிதை நூலை எழுதியவர் ............... **விடை: ஈரோடு தமிழன்பன்**
2. காலமும் நிலையாய் இருப்பது .............................. **விடை: தமிழ்**



Click Here: https://bit.ly/3qEjvjI Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



3. அகமாய்ப் புறமாய் ............... **விடை:** இலக்கியங்கள்

4. இனிமையும், நீர்மையும் தமிழெனில் என்றவரின் இடம்பெற்ற ............ ஆகும் **விடை:** பிங்கல நிகண்டு

5. உலகத் தாய்மொழி நாள் ............ **விடை:** பிப்ரவரி 21

6. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் .........., ............ **விடை:** இலங்கை, சிங்கப்பூர்

7. கவிஞர் ஈரோடு தமிழன்பனின் இயற்பெயர் ................ **விடை:** ஜெகதீசன்

8. ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை எழுதியவர் ............... **விடை:** ஈரோடு தமிழன்பன்

9. கவிஞர் ஈரோடு தமிழன்பன் எழுதிய 'வணக்கம் வள்ளுவ' என்னும் கவிதை நூலுக்கு ................. விருது வழங்கப்பட்டது. **விடை:** சாகித்திய அகாதமி

10. 'சித்தர் மரபிலே தீதறுக்கும் – புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே' – இவ்வரிகள் இடம் பெற்ற நூல் ........... **விடை:** தமிழோவியம்

11. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்று கூறியவர் ........... **விடை:** பாரதியார்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

> காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
> காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!
> அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் – அவை
> அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்
> நிகரிலாக் காப்பியப் பூவனங்கள் – உன்
> நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்!

**வினாக்கள்**

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**
   அ) தமிழோவியம் ஆ) வணக்கம் வள்ளுவ
   இ) தமிழ் விடு தூது ஈ) தொல்காப்பியம்
   **விடை** அ) தமிழோவியம்

2. **இப்பாடலை இயற்றியவர் யார்?**
   அ) பெருஞ்சித்திரனார் ஆ) ஈரோடு தமிழொளி
   இ) கவிமணி ஈ) ஈரோடு தமிழன்பன்
   **விடை** ஈ) ஈரோடு தமிழன்பன்

3. **நிகரிலா – பிரித்து எழுதுக.**
   அ) நிகர் + லா ஆ) நிகல் + இலா
   இ) நிகர் + இலா ஈ) நிகர் + ரிலா
   **விடை** இ) நிகர் + இலா

4. **இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகை, அடி மோனை யாவை?**
   அ) அகமாய்- அமைந்த ஆ) காலம்–காலமும்
   இ) நிகரிலா–நெஞ்சம் ஈ) நெஞ்சம்– நடத்தட்டும்
   **விடை** ஆ) காலம் – காலமும்

5. **காலமும் – இலக்கணக்குறிப்பு தருக.**
   அ) சிறப்பும்மை ஆ) முற்றும்மை
   இ) உம்மைத்தொகை ஈ) எண்ணும்மை
   **விடை** ஆ) முற்றும்மை

> எத்தனை எத்தனை சமயங்கள் – தமிழ்
> ஏந்தி வளர்த்தது தாயெனவே
> சித்தர் மரபிலே தீதறுக்கும் – புதுச்
> சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே....

இயல் 1



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**வினாக்கள்**

**1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**

அ) தமிழோவியம் ஆ) வணக்கம் வள்ளுவ

இ) தமிழ் விடு தூது ஈ) தொல்காப்பியம்

**விடை அ) தமிழோவியம்**

**2. இப்பாடலை இயற்றியவர் யார்?**

அ) பெருஞ்சித்திரனார் ஆ) ஈரோடு தமிழொளி

இ) கவிமணி ஈ) ஈரோடு தமிழன்பன்

**விடை ஈ) ஈரோடு தமிழன்பன்**

**3. எத்தனை எத்தனை - இலக்கணக்குறிப்பு தருக.**

அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர்

இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஈ) எண்ணுப்பெயர்

**விடை ஆ) அடுக்குத்தொடர்**

**4. தீதறுக்கும் - பிரித்து எழுதுக.**

அ) தீ + அறுக்கும் ஆ) தீ + தறுக்கும்

இ) தீது + அறுக்கும் ஈ) தீது + தறுக்கும்

**விடை இ) தீது + அறுக்கும்**

**5. இப்பாடலில் உள்ள இயைபை கூறுக.**

அ) எத்தனை - ஏந்தி ஆ) சித்தர் - சிந்தனை

இ) தாயெனவே - பாய்ந்தனவே ஈ) எத்தனை - எத்தனை

**விடை இ) தாயெனவே - பாய்ந்தனவே**

## குறுவினா

**1. தமிழோவியம் எனும் கவிதை நூலைப் பற்றி குறிப்பு வரைக.**

(i) ஈரோடு தமிழன்பன் எழுதிய தமிழோவியம் என்னும் நூலில் இடம் பெற்றுள்ள கவிதை இது.

(ii) இக்கவிதை குறித்துக் கவிஞர் முன்னுரையில் "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை பாடலும் அப்படித்தான்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

## சிறுவினா

**1. ஈரோடு தமிழன்பன் பற்றி குறிப்பு வரைக.**

(i) ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களிலும் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.

(ii) ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.

(iii) இவரது 'வணக்கம் வள்ளுவ' என்னும் கவிதை நூலுக்கு 2004ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. 'தமிழன்பன் கவிதைகள்' தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்.

(iv) இவரது கவிதைகள் இந்தி, ஆங்கிலம், உருது, மலையாளம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

☆☆☆



www.surabooks.com



Click Here: https://bit.ly/3qEjvjI Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 1

அமுதென்று பேர் | கவிதைப்பேழை

# தமிழ்விடு தூது

## பாடல்

**சீர்பெற்ற செல்வம்**

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்

உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – மண்ணில்

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்

வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே – அந்தரமேல்

முற்றும் உணர்ந்த தேவர்களும் முக்குணமே பெற்றார்நீ
குற்றம்இலாப் பத்துக் குணம்பெற்றாய் – மற்றொருவர்

ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின்மேல் உண்டோநீ
நோக்கிய வண்ணங்கள் நூறுஉடையாய் – நாக்குலவும்

ஊனரசம் ஆறுஅல்லால் உண்டோ செவிகள்உணவு
ஆன நவரசம்உண் டாயினாய் – ஏனோர்க்கு

அழியா வனப்பு ஒன்று அலது அதிகம் உண்டோ
ஒழியா வனப்புஎட்டு உடையாய்... **(கண்ணிகள் 69–76)**

## பாடலின் பொருள்

இனிக்கும் தெளிந்த அமுதமாய் அந்த அமிழ்தினும் மேலான முத்தி ஆகிய விடுதலை தரும் கனியே! **இயல், இசை, நாடகம்** என, மூன்றாய்ச் சிறந்து விளங்கும் என் தமிழே! அறிவால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் நான் மகிழ்ந்து விடுக்கும் வேண்டுகோள் ஒன்றுள்ளது. அதைக் கேட்பாயாக.

தமிழே! உன்னிடமிருந்து குறவஞ்சி, பள்ளு என்ற நூல்களைப் பாடிப் புலவர்கள் சிறப்புக் கொள்கின்றனர். பிறர் படிக்கும் வகையில் நீ அவற்றைக் கொண்டிருக்கிறாய். அதனால் உனக்குத் **தாழிசை, துறை, விருத்தம்** என்னும் மூவகைப் பாவினங்களிலும் உறவு ஏதேனும் உண்டோ?

பாவின் திறம் அனைத்து கைவரப்பெற்று (பொருந்தி நின்று) என்றுமே **'சிந்தா'** (கெடாத) **மணியாய்** இருக்கும் உன்னை (இசைப்பாடல்களுள் ஒருவகையான) 'சிந்து' என்று (அழைப்பது நின் பெருமைக்குத் தகுமோ? அவ்வாறு) கூறிய நா இற்று விழும் அன்றோ?

வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள்கூட சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள். ஆனால், நீயோ பத்துக்குற்றங்கள் இல்லாமல் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் **பத்துக்குணங்களையும்** பெற்றுள்ளாய்.

மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என ஐந்திற்குமேல் இல்லை. நீயோ புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடைமெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்.

நாவின்மீது பொருந்தும் குறைபாடுடைய உணவின் **சுவைகள் ஆறுக்கு** மேல் இல்லை. நீயோ செவிகளுக்கு விருந்தளிக்கும் **ஒன்பது சுவைகளைப்** பெற்றுள்ளாய். தமிழை அடையப் பெறாத மற்றையோர்க்கு அழியாத **அழகு** ஒன்றே ஒன்று அல்லாமல் அதிகம் உண்டோ? நீயோ நீங்காத அம்மை முதலிய **அழகுகள் எட்டினைப்** பெற்றுள்ளாய்.



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



## நூற்குறிப்பு

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் 'தூது' என்பதும் ஒன்று. இது, **'வாயில் இலக்கியம்'**, **'சந்து இலக்கியம்'** என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இது தலைவன் தலைவியருள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக **'மாலையை வாங்கி வருமாறு'** அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் **'கலிவெண்பா'** வால் இயற்றப்படுவதாகும். தமிழ்விடு தூது, மதுரையில் கோவில்கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல்கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது. இந்நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது. தமிழின் சிறப்புகளைக் குறிப்பிடும் சில கண்ணிகள் இப்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. இந்நூலை 1930**இல் உ.வே.சா.** முதன் முதலில் பதிப்பித்தார்.

இதன் **ஆசிரியர் யார்** என அறிந்துகொள்ள இயலவில்லை.

## சொல்லும் பொருளும்

1. குறம், பள்ளு – சிற்றிலக்கிய வகைகள்
2. மூன்றினம் – துறை, தாழிசை, விருத்தம்
3. திறமெல்லாம் – சிறப்பெல்லாம்
4. சிந்தாமணி – சிதறாத மணி (சீவகசிந்தாமணி) என்னும் இருபொருளையும் குறிக்கும்.
5. சிந்து – ஒரு வகை இசைப்பாடல்
6. முக்குணம் – மூன்று குணங்கள் (சமத்துவம், அமைதி, மேன்மை ஆகியவற்றைச் சுட்டும் குணம்)
7. இராசசம் – போர், தீவிரமான செயல்களைக் குறிக்கும் குணம்
8. தாமசம் – சோம்பல், தாழ்மை போன்றவற்றைக் குறிக்கும் குணம்
9. பத்துக்குணம் – செறிவு, சமநிலை முதலிய பத்துக்குண அணிகள்
10. வண்ணங்கள் ஐந்து – வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை
11. வண்ணம்நூறு – குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு
12. ஊனரசம் – குறையுடைய சுவை
13. நவரசம் – வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை ஆகிய ஒன்பது சுவை.
14. வனப்பு – அழகு. அவை அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.

## இலக்கணக்குறிப்பு தருக

1. முத்திக்கனி – உருவகம்
2. தெள்ளமுது – பண்புத்தொகை
3. குற்றமிலா, சிந்தாமணி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்
4. நா – ஓரெழுத்து ஒரு மொழி
5. செவிகள் உணவான – நான்காம் வேற்றுமைத்தொகை



# மதிப்பீடு

## பலவுள் தெரிக

**1. தமிழ்விடு தூது .................. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.**

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல் **விடை: இ) சிற்றிலக்கியம்**

**2. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.**

அ) ....... இனம் ஆ) வண்ணம் ....... இ) ....... குணம் ஈ) வனப்பு .......

க) மூன்று, நூறு, பத்து, எட்டு உ) எட்டு, நூறு, பத்து, மூன்று
ங) பத்து, நூறு, எட்டு, மூன்று ச) நூறு, பத்து, எட்டு, மூன்று **விடை: க) மூன்று, நூறு, பத்து, எட்டு**



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



3. **அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு**

அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

**விடை: ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

## குறுவினா

1. **கண்ணி என்பதன் விளக்கம் யாது?**

இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர். அதேபோல் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

## நெடுவினா

1. **தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக. (அ) தமிழ்விடுதூது குறிப்பிடும் வனப்புகளை எழுதுக.**

(i) இனிக்கும் தெளிந்த அமுதமாய் அந்த அமுதினும் மேலான வீடுபேற்றைத் தருகின்ற கனியாகத் திகழ்கிறது. இயல், இசை, நாடகம் என மூன்றாய்ச் சிறந்து விளங்குகிறது.

(ii) அறிவால் உண்ணப்படும் தேனாக இனிக்கிறது. புலவர்கள் குறவஞ்சி, பள்ளு ஆகிய நூல்களைப் பாடி சிறப்புப் பெறுவதற்கு, அவற்றைப் படிக்க எடுத்துக் கொடுக்கிறது. அதனால் தாழிசை, துறை, விருத்தம் ஆகிய மூவகைப் பாவினங்களிலும் தமிழ் உறவு கொண்டு சிறப்புடையது.

(iii) பாவின் திறம் அனைத்தும் கைவரப் பெற்று, என்றும் சிந்தாமணியாய்த் தமிழ் விளங்குகிறது. வானத்தில் வசிக்கும் தேவர்கள்கூட மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள். ஆனால் தமிழ் பத்துக் குணங்களைப் பெற்றுள்ளது.

(iv) மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் ஐந்திற்கு மேலில்லை. ஆனால் தமிழோ நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளது.

(v) நாவின் மீது பொருந்தும் உணவின் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை. ஆனால் தமிழோ செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளது. தமிழ்மொழி அழியாத அம்மை முதலான எட்டு அழகுகளைப் பெற்றுள்ளது.

(vi) தமிழ் இத்தகைய சிறப்புகளைப் பெற்றுள்ளதால், தூது அனுப்புவதற்குத் தமிழே சிறந்தது என்று தமிழ்விடு தூது காரணங்களாகக் காட்டுகின்றது.

## கூடுதல் வினாக்கள்

1. கண்ணியில் வரும் அடிகள் **விடை: இரண்டடி**
2. சிற்றிலக்கியங்கள்............. வகைப்படும். **விடை: 96**
3. முத்தமிழ் ............. என மூவகைப்படும். **விடை: இயல், இசை, நாடகம்**
4. தமிழ்விடுதூது ................ பா வகையால் எழுதப்பட்டது. **விடை: கலிவெண்பா**
5. வண்ணம்............. வகைப்படும். **விடை: நூறு**
6. வனப்பு ............. வகைப்படும். **விடை: எட்டு**

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ - திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே

**வினாக்கள்**

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**

அ) தமிழ்விடு தூது ஆ) நாரைவிடு தூது

இ) தமிழோவியம் ஈ) முத்தொள்ளாயிரம்

**விடை: அ) தமிழ்விடு தூது**



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

இயல் 1

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**2. குறம், பள்ளு என்பவை யாவை?**

அ) பதினெண் கீழ்க்கணக்கு ஆ) பதினெண் மேல்கணக்கு
இ) சிற்றிலக்கியங்கள் ஈ) ஐம்பெருங்காப்பியங்கள்

**விடை: இ) சிற்றிலக்கியங்கள்**

**3. நாச்சிந்துமே – பிரித்து எழுதுக.**

அ) நா + சிந்துமே ஆ) நாச் + சிந்துமே
இ) நா + சிந்து + மே ஈ) நாசி + சிந்துமே

**விடை: அ) நா + சிந்துமே**

**4. சிந்து என்பது ..............**

அ) நாட்டுப்புறப்பாடல் ஆ) இசைப்பாடல்
இ) பக்திப்பாடல் ஈ) கதைப்பாடல்

**விடை: ஆ) இசைப்பாடல்**

**5. சிந்தாமணி என்பதன் பொருள் ..............**

அ) சீவகசிந்தாமணி ஆ) சிகப்பான மணி
இ) சிதறாத மணி ஈ) அ) மற்றும் இ)

**விடை: ஈ) அ மற்றும் இ**

ஊனரசம் ஆறுஆல்லால் உண்டோ செவிகள்உணவு
ஆன நவரசம்உண் டாயினாய் – ஏனோர்க்கு
அழியா வனப்பு ஒன்று அலது அதிகம் உண்டோ
ஒழியா வனப்புஎட்டு உடையாய் .......

**வினாக்கள்**

**1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**

அ) முத்தொள்ளாயிரம் ஆ) தென்றல் விடு தூது
இ) தமிழ்விடு தூது ஈ) தமிழோவியம்

**விடை: இ) தமிழ்விடுதூது**

**2. நவரசம், இதில் உள்ள சுவைகள் மொத்தம் எத்தனை?**

அ) எட்டு ஆ) ஒன்பது இ) பத்து ஈ) எழு

**விடை: ஆ) ஒன்பது**

**3. அழியா வனப்பு – இலக்கணக்குறிப்பு தருக.**

அ) எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) குறிப்புப் பெயரெச்சம் ஈ) தெரிநிலைப் பெயரெச்சம்

**விடை: ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

**4. வனப்பு என்பதன் பொருள் யாது?**

அ) வனம் ஆ) வன்மை இ) அழகு ஈ) வண்ணம்

**விடை: இ) அழகு**

**5. நா என்பது ...............**

அ) தொடர்மொழி ஆ) பொதுமொழி
இ) தனிமொழி ஈ) ஓரெழுத்து ஒரு மொழி

**விடை: ஈ) ஓரெழுத்து ஒரு மொழி**

## சிறுவினா

**1. தூது இலக்கியம் பற்றி குறிப்பு வரைக.**

(i) தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கடவுளிடம் தன் காதலைத் தெரிவித்து வருமாறு தலைவி தூது அனுப்புவதாகவே தூது இலக்கியங்கள் இயற்றப்பட்டன.

(iv) பிறநாடுகளைக் குறிப்பிடும் போது வேற்றுநாடு, பிறநாடு என்று குறிக்காது மொழிமாறும் நாடு – மொழிபெயர் தேயம் – என்றே வரையறுத்துக் கூறியுள்ளனர்.

☆☆☆



www.surabooks.com



Click Here: https://bit.ly/3qEjvjl
Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 9 அன்பென்னும் அறனே | கவிதைப்பேழை

# அக்கறை

– கல்யான்ஜி

## பாடல்

| | |
|---|---|
| சைக்கிளில் வந்த<br>தக்காளிக் கூடை சரிந்து<br>முக்கால் சிவப்பில் உருண்டது<br>அனைத்துத் திசைகளிலும் பழங்கள்<br>தலைக்கு மேலே<br>வேலை இருப்பதாய்க் | கடந்தும் நடந்தும்<br>அனைவரும் போயினர்<br>பழங்களை விடவும்<br>நசுங்கிப் போனது<br>அடுத்த மனிதர்கள்<br>மீதான அக்கறை. – கல்யாண்ஜி |

**பாடலின் பொருள் :**

மிதிவண்டியில் வந்த தக்காளி கூடை சரிந்து ஒரே சிவப்பு மயமாய் தரையில் உருண்டு ஓடியது. எல்லாத் திசைகளிலும் பழங்கள் சிதறிக் கிடந்தன. பார்த்தவர் அனைவரும் தங்களுக்கு அதிக வேலை இருப்பதாகக் கூறியபடி கடந்தும் அதன் வழியாக நடந்தும் சென்றனர். நசுங்கிய பழங்களை விட அவர்கள் உள்ளத்தில் நசுங்கிப்போனது பிற மனிதர்கள் மீதான அக்கறை(கரிசனை).

**சொல்லும் பொருளும் :**

| | |
|---|---|
| 1. சைக்கிள் – மிதிவண்டி | 2. அக்கறை – கரிசனை |



## ஆசிரியர் குறிப்பு

கல்யாணிஜியின் இயற்பெயர் கல்யாணசுந்தரம்; சிறுகதை, கவிதை, கட்டுரை, புதினம் எனத் தொடர்ந்து எழுதி வருபவர். வண்ணதாசன் என்ற பெயரில் கதை இலக்கியத்திலும் பங்களிப்புச் செய்து வருகிறார். **புலரி, முன்பின், ஆதி, அந்நியமற்ற நதி, மணல்** உள்ள ஆறு ஆகியவை அவரின் கவிதை நூல்களுள் சில. இவை தவிர, **அகமும் புறமும்** என்ற கட்டுரைத் தொகுப்பும் வெளிவந்திருக்கிறது. பல கடிதங்கள் தொகுக்கப்பட்டு, **'சில இறகுகள் சில பறவைகள்'** என்ற பெயரில் வெளியானது. கலைக்க முடியாத ஒப்பனைகள், தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள், உயரப் பறத்தல், ஒளியிலே தெரிவது உள்ளிட்டவை இவரது குறிப்பிடத்தக்க சிறுகதைத் தொகுப்புகள். **ஒரு சிறு இசை** என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக இவருக்கு 2016 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

## இலக்கணக்குறிப்பு தருக

1. உருண்டது, போனது – ஒன்றன் பால் வினைமுற்றுகள்
2. சரிந்து – வினையெச்சம்
3. அனைவரும் – முற்றும்மை

## மதிப்பீடு

### பலவுள் தெரிக

1. **வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல்**

அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின்
இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

**விடை: அ) ஒரு சிறு இசை**



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**சிறுவினா**

1. **'பழங்களை விடவும் நசுங்கிப் போனது' – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

(i) **இடம் :** கல்யாண்ஜி எழுதிய 'அக்கறை' கவிதையில் இடம்பெற்றுள்ளது. சைக்கிளில் கொண்டு வந்த தக்காளிப்பழக் கூடை சரிந்து விழுந்தது. நான்குபுறமும் சிதறிக்கிடந்த பழங்களை யாரும் கண்டு கொள்ளாமல் சென்றபோது கூறியது இது.

(ii) **பொருள் :** பழங்கள் கீழே விழுந்ததால் நசுங்கிப் போனது. அதனை யாருமே கண்டு கொள்ளாததால் தக்காளி வியாபாரியின் மனமும் நசுங்கிப் போயிற்று.

(iii) **விளக்கம் :** சைக்கிளில் கொண்டு வந்த தக்காளிப்பழக் கூடை சரிந்து விழுந்து நான்கு புறமும் சிதறி ஓடியது. அதனைக் கடந்து பலரும் சென்றனர். அவர்களின் கால்கள் பட்டு நசுங்கிப்போனது. கீழே விழுந்த பழங்களை யாருமே கண்டு கொள்ளாமல் போன மானிடங்களின் மனங்களை என்னவென்று கூறுவது?

2. **மணல் விளையாட்டு என்னும் தலைப்பில் சிறு கவிதை படைக்க.**

மறைப்பதை எடுப்பதும்
எடுப்பதை மறைப்பதும்
கண்முன்னே
நடக்கும் வித்தை.

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக.**

1. புதுக்கவிதையைத் தோற்றுவித்தவர் ..................... **விடை:** பாரதியார்
2. கல்யாண்ஜியின் இயற்பெயர் ..................... **விடை:** கல்யாணசுந்தரம்
3. கல்யாண்ஜி ................... என்ற பெயரில் கதை இலக்கியத்திலும் பங்களிப்பு செய்து வருகிறார். **விடை:** வண்ணதாசன்
4. கல்யாண்ஜியின் கட்டுரைத் தொகுப்பு .................. ஆகும். **விடை:** அகமும் புறமும்
5. கல்யாண்ஜியின் கடிதங்கள் தொகுக்கப்பட்டு .................... என்ற பெயரில் வெளியானது. **விடை:** சில இறகுகள் சில பறவைகள்
6. கல்யாண்ஜிக்கு ..................... என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக சாகித்திய அகாதெமி பரிசு வழங்கப்பட்டது. **விடை:** ஒரு சிறு இசை
7. புதுக்கவிதையின் வரலாறு ............... ஆண்டுகளை எட்டுகிறது. **விடை:** நூறு
8. புதுக்கவிதைகள் வலியுறுத்துவது ..................... **விடை:** மனித நேயம்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

சைக்கிளில் வந்த
தக்காளிக் கூடை சரிந்து
முக்கால் சிவப்பில் உருண்டது
அனைத்துத் திசைகளிலும் பழங்கள்
தலைக்கு மேலே
வேலை இருப்பதாய்க்
கடந்தும் நடந்தும்
அனைவரும் போயினர்
பழங்களை விடவும்
நசுங்கிப் போனது
அடுத்த மனிதர்கள்
மீதான அக்கறை.





Click Here: https://bit.ly/3qEjvjl
Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**வினாக்கள்**

**1. இப்பாடல் வரிகள் எந்தக் கவிதையில் இடம் பெற்றுள்ளது?**

அ) அக்கறை　ஆ) குறுந்தொகை　இ) ஒளியின் அழைப்பு　ஈ) பட்டமரம்　**விடை: அ) அக்கறை**

**2. இப்பாடலை இயற்றியவர் யார்?**

அ) கு.ப.ரா　ஆ) வைரமுத்து　இ) பிச்சமூர்த்தி　ஈ) கல்யாண்ஜி　**விடை: ஈ) கல்யாண்ஜி**

**3. எது நசுங்கிப் போனதாக இப்பாடல் கூறுகிறது?**

அ) மனிதநேயம்　ஆ) பாசம்　இ) சைக்கிள்　ஈ) கூடை　**விடை: அ) மனிதநேயம்**

**4. அனைவரும் - இலக்கணக்குறிப்பு தருக**

அ) உம்மைத்தொகை　ஆ) எண்ணும்மை

இ) முற்றும்மை　ஈ) சிறப்பும்மை　**விடை: இ) முற்றும்மை**

**5. குழுவில் சேராததைக் கண்டறி.**

அ) சைக்கிள் - தக்காளி　ஆ) தலைக்கு - வேலைக்கு

இ) தக்காளி - முக்கால்　ஈ) பழங்கள் - நசுங்கி　**விடை: ஈ) பழங்கள் - நசுங்கி**

## சிறுவினா

**1. கல்யாண்ஜி குறிப்பு எழுதுக.**

| | |
|---|---|
| இயற் பெயர் | - கல்யாணசுந்தரம் |
| இயற்றியவை | - சிறுகதை, கவிதை, கட்டுரை, நாவல் |
| இயற்றிய கவிதை நூல்கள் | - புலரி, முன்பின், ஆதி, அந்நியமற்ற, நதி, மணல் உள்ள ஆறு. |
| இயற்றிய சிறுகதை தொகுப்புகள் | - கலைக்க முடியாத ஒப்பனைகள், தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள் உயரப் பறத்தல், ஒளியிலே தெரிவது. |

வண்ணதாசன் என்ற பெயரில் கதை இலக்கியத்திலும் பங்களிப்பு செய்து வருகிறார். இவரது 'ஒரு சிறு இசை' என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக இவருக்கு 2016 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி பரிசு வழங்கப்பட்டது.

☆☆☆

இயல் 9



Click Here: https://bit.ly/3qEjvjl　Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 9 அன்பென்னும் அறனே கவிதைப்பேழை

# குறுந்தொகை

- பெருங்கடுங்கோ

**பாடல்**

**நசை பெரிது உடையர்; நல்கலும் நல்குவர்**
**பிடிபசி களைஇய பெருங்கை வேழம்**
**மென்சினை யாஅம் பொளிக்கும்**
**அன்பின தோழி அவர் சென்ற ஆறே.** (37)

**- பாலை பாடிய பெருங்கடுங்கோ**

பேரன்பு உடையவன் பெரிதுனக்குத் தருவான்
பொருள்தேடச் சென்றவன் பறந்தோடி வருவான்
பசித்தீ அணைக்க மெல்லிய யாமரக்
கிளையொடிந்து உதவும் யானைக் காட்சியே
உன்நினைவு தூவி இங்கவனை அழைத்துவரும்
மலரினும் மெல்லியளே மனக்கவலை கொள்ளாதே.

**பாடலின் பொருள் :**

தோழி தலைவியிடம், "தலைவன் உன்னிடம் மிகுந்த விருப்பம் உடையவன். அவன் மீண்டும் வந்து அன்புடன் இருப்பான். பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்து சென்ற வழியில், பெண் யானையின் பசியைப் போக்க, பெரிய கைகளை உடைய ஆண்யானை, மெல்லிய கிளைகளை உடைய 'யா' மரத்தின் பட்டையை உரித்து, அதிலுள்ள நீரைப் பருகச் செய்து தன் அன்பை வெளிப்படுத்தும்" (அந்தக் காட்சியைத் தலைவனும் காண்பான்; அக்காட்சி உன்னை அவனுக்கு நினைவுபடுத்தும். எனவே, அவன் விரைந்து உன்னை நாடி வருவான். வருந்தாது ஆற்றியிருப்பாயாக) என்று கூறினாள்.

இப்பாடலில் **இறைச்சி** அமைந்துள்ளது.

**திணை** : பாலை - மணலும் மணலைச் சார்ந்த இடமும் **பாலைத் திணை**யாகும். கொடுமையான வெயில் வாட்டுகின்ற நிலப்பகுதி.

**துறை** : தலைவன் விரைந்து வருவான் எனத் தோழி தலைவியை ஆற்றியது.

**சொல்லும் பொருளும் :**

| | |
|---|---|
| 1. நசை - விருப்பம் | 5. யா - ஒரு வகை மரம், பாலை நிலத்தில் வளர்வது |
| 2. நல்கல் - வழங்குதல் | 6. பொளிக்கும் - உரிக்கும் |
| 3. பிடி - பெண்யானை | 7. ஆறு - வழி |
| 4. வேழம் - ஆண்யானை | |

## நூல் வெளி

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை. இது, தமிழர் வாழ்வின் அகப்பொருள் நிகழ்வுகளைக் கவிதையாக்கிக் கூறுகிறது; கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களைக் கொண்டது. இதன் பாடல்கள் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்டவை. 1915ஆம் ஆண்டு சௌரிப்பெருமாள் அரங்கனார் முதன் முதலில் இந்நூலைப் பதிப்பித்தார். நமக்குப் பாடமாக வந்துள்ளது 37ஆவது பாடல் ஆகும்.

## ஆசிரியர் குறிப்பு

இப்பாடலின் ஆசிரியர் '**பாலை பாடிய பெருங்கடுங்கோ**'. இவர் சேர மரபைச் சேர்ந்த மன்னர்; கலித்தொகையில் பாலைத் திணையைப் பாடியதால் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' என அழைக்கப்பெற்றார்.



www.surabooks.com



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



### இலக்கணக்குறிப்பு தருக

1. களைஇய – சொல்லிசை அளபெடை
2. பெருங்கை, மென்சினை – பண்புத்தொகைகள்
3. பொளிக்கும் – செய்யும் என்னும் வினைமுற்று
4. பிடிபசி – ஆறாம் வேற்றுமைத்தொகை
5. அன்பின – பலவின்பால் அஃறிணை வினைமுற்று

## மதிப்பீடு

### பலவுள் தெரிக

1. **'யா' மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?**

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல் **விடை: இ) பாலை**

### குறுவினா

1. **பிடிபசி களைஇய பெருங்கை வேழம் – இவ்வடியில் உள்ள இலக்கணக் குறிப்புகளைக் கண்டறிக.**
   (i) பிடிபசி – ஆறாம் வேற்றுமைத்தொகை
   (ii) களைஇய – சொல்லிசை அளபெடை
   (iii) பெருங்கை – பண்புத்தொகை.
2. **குறுந்தொகை – பெயர்க்காரணம் எழுதுக.**
   (i) குறுமை + தொகை = குறுந்தொகை
   (ii) தமிழர்களின் அகவாழ்வினைக் கூறும் நான்கு முதல் எட்டு அடிகளை உடைய குறுகிய பாடல்களின் தொகுப்பு. ஆதலால் குறுந்தொகை எனப் பெயர் பெற்றது.

### சிறுவினா

1. **'யா' மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக? விளக்குக.**
   (i) **காரணம் :** பெண் யானையின் பசியைப் போக்க, பெரிய கைகளை உடைய ஆண்யானை, மெல்லிய கிளைகளை உடைய 'யா' மரத்தின் பட்டையை உரித்துத் தன் அன்பை வெளிப்படுத்தியது.
   (ii) **விளக்கம் :** தோழி தலைவியிடம், "தலைவன் உன்னிடம் மிகுந்த விருப்பம் உடையவன். அவன் பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்து சென்றுள்ளான். சென்ற வழியில் ஆண்யானையின் செயலைக் காண்பான். அக்காட்சி உன்னை அவனுக்கு நினைவுபடுத்தும். எனவே, அவன் விரைந்து உன்னை நாடி வருவான். அவன் மீண்டும் வந்து அன்புடன் இருப்பான் வருந்தாதே!" என்று கூறினாள்.

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக.**

1. குறுந்தொகை .................. நூல்களுள் ஒன்று. **விடை: எட்டுத்தொகை**
2. குறுந்தொகை .....................இலக்கிய நூலாகும். **விடை: அக**
3. இயற்கைக் காட்சிகள் மூலம் நாட்டு வளத்தைப் படம்பிடித்துக் காட்டும் பல பாடல்களைக் கொண்ட நூல் ..................... **விடை: குறுந்தொகை**
4. குறுந்தொகையைப் பதிப்பித்தவர் .................. **விடை: சௌரிப்பெருமாள் அரங்கனார்**
5. ஆண்யானை மெல்லிய கிளைகளை உடைய ........... மரத்தின் பட்டையை உரித்தது. **விடை: யா**
6. குறுந்தொகைப் பாடல்கள் ....................சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்டவை. **விடை: நான்கடிச்**
7. குறுந்தொகை கடவுள் வாழ்த்து நீங்கலாக ................. பாடல்களைக் கொண்டது. **விடை: 401**





Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



8. குறுந்தொகை ஆசிரியர் ................ **விடை:** பாலை பாடிய பெருங்கடுங்கோ

9. பாலை பாடிய பெருங்கடுங்கோ ................ மரபைச் சேர்ந்த மன்னர். **விடை:** சேர

10. குறுந்தொகை நூல் முதன்முதலில் பதிப்பித்த ஆண்டு ................ **விடை:** 1915

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

நசை பெரிது உடையர்; நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி அவர் சென்ற ஆறே.

**வினாக்கள்**

1. **இப்பாடல் வரிகள் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?**
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) குறுந்தொகை ஈ) நற்றிணை **விடை: இ) குறுந்தொகை**

2. **இப்பாடலை இயற்றியவர் யார்?**
அ) உருத்திரங்கண்ணனார் ஆ) பாலை பாடிய பெருங்கடுங்கோ
இ) நல்லந்துவனார் ஈ) கூடலூர் கிழார் **விடை: ஆ) பாலை பாடிய பெருங்கடுங்கோ**

3. **களைஇய – இலக்கணக்குறிப்பு தருக**
அ) இசைநிறை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை **விடை: ஆ) சொல்லிசை அளபெடை**

4. **நசை என்பதன் பொருள் யாது?**
அ) வியப்பு ஆ) மகிழ்ச்சி இ) விருப்பம் ஈ) புன்னகை **விடை: இ) விருப்பம்**

5. **இபாடல் எந்தத் திணைக்குரியது?**
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) பாலை **விடை: ஈ) பாலை**



## குறுவினா

1. **பாலை பாடிய பெருங்கடுங்கோ – பெயர்க் காரணம் யாது?**
குறுந்தொகையின் ஆசிரியர் கலித்தொகையில் பாலைத் திணையைப் பாடியதால் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' என அழைக்கப்படுகிறார்.

2. **பெண் யானையின் பசியைப் போக்க ஆண் யானை செய்த செயல் யாது?**
பெண் யானையின் பசியைப் போக்குவதற்காக ஆண் யானை மெல்லிய கிளைகளை உடைய 'யா' மரத்தின் பட்டையை உரித்துத் தனது அன்பை வெளிப்படுத்தியது.

## சிறுவினா

1. **குறுந்தொகை குறிப்பு வரைக.**
(i) குறுந்தொகை ஆசிரியர் – பாலை பாடிய பெருங்கடுங்கோ.
(ii) எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
(iii) தமிழர் வாழ்வின் அகப்பொருள் நிகழ்வுகளைக் கவிதையாக்கிக் கூறுகிறது.
(iv) கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களைக் கொண்டது.
(v) இதன் பாடல்கள் நான்கடிச் சிற்றெல்லையும், எட்டடிப் பேரெல்லையும் கொண்டவை.
(vi) இந்நூல் 1915ஆம் ஆண்டு முதன்முதலில் பதிப்பிக்கப்பட்டது. பதிப்பித்தவர் சௌரிப் பெருமாள் அரங்கனார்.

☆☆☆



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 9

அன்பென்னும் அறனே | விரிவானம்

# தாய்மைக்கு வறட்சி இல்லை

– சு. சமுத்திரம்

## ஆசிரியர் குறிப்பு

**சு.சமுத்திரம்** திருநெல்வேலி மாவட்டம், திப்பணம்பட்டியைச் சேர்ந்தவர். தமது பெயரைப் போலவே ஆழமும் விரிவும் வளமும் கொண்டவர்; முந்நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்; **வாடாமல்லி, பாலைப்புறா, மண்சுமை, தலைப்பாகை, காகித உறவு** போன்றவை இவரின் புகழ்பெற்ற சிறுகதைத் தொகுப்புகளாகும். **'வேரில் பழுத்த பலா'** புதினம் சாகித்திய அகாதெமி விருதையும் **'குற்றம் பார்க்கில்'** சிறுகதைத் தொகுதி தமிழக அரசின் பரிசையும் பெற்றுள்ளன.

## மதிப்பீடு

### நெடுவினா

**1. 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.**

கர்நாடக மாநிலத்தின் வடமாவட்டத் தலைநகரான குல்பர்கா நகரைத் தாண்டிய தேசிய நெடுஞ்சாலை. அச்சாலையின் வலது பக்கம் முள்வேலி போட்ட ஒரு தோட்டம் இருந்தது. இத்தோட்டத்தின் முன் பகுதியில் ஒரு கல் மாளிகை. இதையொட்டி இரண்டு கம்புகள் தாங்கி நிற்கும் முக்கோண வாசல் உடைய கதவுகளற்ற குடிசை ஒன்று இருந்தது. அக்குடிசைக்கு முன்னால் ஒரு குடும்பமே சுருண்டு கிடந்தது. அக்குடும்பத்தலைவி அழுக்காடை உடுத்தி இருந்தாள். அவளருகில் சாம்பல் நிற நாய்க்குட்டிகள், இரண்டு சடை நாய்கள், கால்மாட்டில் மூன்று வயது பெண் குழந்தை, ஒருச்சாய்த்துக் கிடந்தாள். அப்போது ஜீப் ஒன்று மிக வேகமாக வந்தது. பயந்து போன அவள் தன் கணவனின் கையைப் பிடித்துக் காப்பாற்றினாள். தன்னையும் பாதுகாத்துக் கொண்டாள். நாய்க்குட்டிகள் பயந்து போய் எம்பி எம்பிக் குதித்தன. அவளுடைய செல்லாக் கோபம் பொறுமையாகியது.

ஜீப் தோட்டத்து மாளிகைக்குச் சென்றது. ஜீப்பில் வந்த அதிகாரி உடன் வந்தவர்களுக்கு வாழையிலையில் பிரியாணியைக் கொடுத்தார். அப்போது அங்கே வந்த தோட்டக்காரன் மண்பானையை வைத்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் நடந்தான். அந்த அதிகாரி அவனை அழைத்து பாதிப் பிரியாணியோடு அந்தத் தட்டை எடுத்து அவனிடம் நீட்டினார். அவன் தயக்கத்துடன் வாங்கி மற்றவர்களுக்குப் பரிமாறப் போனான். அந்த அதிகாரி அவன் தோளைத் தட்டிக் கொடுத்தார். இலையிலிருந்த ஒரு முட்டையை எடுத்து அந்தச் சைவப் பிரியாணிக்கு வெள்ளை மகுடம் சூட்டி, இதர வகையறாக்களையும் அதில் அள்ளிப் போட்டு, அவனைத் தன் குடும்பத்தை நோக்கி நடக்கும்படி முதுகைத் தள்ளினார். அதை எடுத்துக் கொண்டு மனைவியை நோக்கி நடந்தான்.

அவனைப் பார்த்தும் அவள் கண்களால் கண்டித்தாள். பிறகு தன் கைகளால் அடித்தபடியே அவனைத் தண்டித்தாள். பிறரிடம் வாங்கி உண்பதை அவள் விரும்பவில்லை. ஆனால் பிள்ளைகளின் பசிப் பார்வையைக் கண்டாள். பிறகு வீட்டிலிருந்து சப்பாத்தியைக் கொண்டு வந்தாள். ஆளுக்கு இரண்டைக் கொடுத்தாள். அதனுடன் பிரியாணியையும் கொடுத்தாள். பிள்ளைகள் அவற்றை மெல்லச் சுவைத்தார்கள்.

அவள் ஈயத்தட்டை எடுத்து ஒரு கவளத்தை உருட்டி வாய்க்குள் திணித்தாள். உலர்ந்து போய் இருந்த அவள் தொண்டை அதை உள் வாங்க மறுத்தது. அதனைக் கண்ட அதிகாரி தன் கையில் இருந்த தண்ணீரை நீட்டினார். அந்த அதிகாரி "உன்னை மாதிரியே கஷ்டப்பட்ட ஒரு தாய்க்குத்தானம்மா பிறந்தேன். உன்னை என் தாயாய் நினைத்துத்தான் கொடுக்கின்றேன்" என்று கூறினார். அச்சொற்களுக்குள் அதிகாரியின் மனிதநேயம் அவளுக்குப் புரிந்தது.



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



## கூடுதல் வினா

1. **தாய்மைக்கு வறட்சி இல்லை – இக்கதையை கட்டுரை வடிவில் தருக.**

| குறிப்புச் சட்டம்: |
|---|
| ♦ முன்னுரை |
| ♦ ஏழைத்தாயின் குடும்பம் |
| ♦ ஜீப்பில் வந்த அதிகாரி |
| ♦ அதிகாரியின் மனிதநேயம் |
| ♦ தோட்டக்காரனின் புலம்பல் |
| ♦ தோட்டக்காரனின் மனைவியின் செயல்கள் |
| ♦ ஏழைத்தாயின் தாய்மைக்குணம்: |
| ♦ முடிவுரை |

**முன்னுரை:**

தாய்மை சாதி மதம் பேதம் அறியாது, உயர்ந்தவர் தாழ்ந்தவர் வேறுபாடு அறியாது. தாய்மைக்கு உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் சமம்தான். அப்படிப்பட்ட வறண்டுவிடாத தாய்மையைப் பற்றி சு. சமுத்திரம் கூறுவதை இக்கட்டுரையில் காண்போம்.

**ஏழைத்தாயின் குடும்பம்:**

கர்நாடக மாநிலத்தில் ஒரு தேசிய நெடுஞ்சாலையின் வலது பக்கம் முள்வேலி போட்ட ஒரு தோட்டம் இருந்தது. தோட்டத்தின் முன் பகுதியில் ஒரு கல் மாளிகை. இதையொட்டி இரண்டு கம்புகள் தாங்கி நிற்கும் முக்கோண வாசல் உடைய கதவுகளற்ற குடிசை இருந்தது. அக்குடிசையின்முன் ஏழைத்தாய், அவளுடைய கணவனான தோட்டக்காரன், மூன்று வயதில் பெண் குழந்தை, ஒரு கைக்குழந்தை என ஒரு குடும்பமே சுருண்டு கிடந்தது. அவர்களுடன் இரு நாய்க்குட்டிகளும் வாழ்ந்து வந்தன.

**ஜீப்பில் வந்த அதிகாரி:**

ஒருநாள், அங்கு அதிகாரி ஒருவர் தன் அலுவலகப் பணியாளருடன் ஜீப்பில் வந்து இறங்கினார். அவர்கள் கொண்டுவந்த உணவை உண்ணத் தயாரானார்கள். அப்போது தோட்டக்காரன் அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கொண்டுபோய் கொடுத்துவிட்டுத் திரும்பினான். அந்த அதிகாரி அவனை அழைத்துப் பாதிப் பிரியாணி, முட்டை,பிற உணவுப்பொருள்களையும் கொடுத்தார். அவனோ ஏதோ சொல்ல முயன்றான், பிறகு தன்மானத்தை வயிற்றுக்குள் தின்றபடியே தன் மனைவியை நோக்கி நடந்தான். அவள் தன் தலையில் கைகளால் அடித்தபடியே அவனைத் தண்டித்தாள்.

**அதிகாரியின் மனிதநேயம்:**

அதிகாரி சாப்பாட்டுத் தட்டுடன் அந்தக் குடும்பத்தை நோக்கி நடந்தார்., பாதி வழியில் நின்று கவனித்தார். அவள் தன் குடும்ப உறுப்பினர்களின் உணர்வுகளைப் புரிந்தவளாய்க் கணவன் கையிலிருந்த தட்டை வாங்கினாள். தன் வீட்டில் இருந்த சப்பாத்தியையும் அதிகாரி கொடுத்த உணவையும் பங்கிட்டு அனைவருக்கும் கொடுத்தாள். அவர்கள் அந்தப் பிரியாணியின் சுவை தீர்ந்துவிடுமோ என எண்ணி மெல்லச் சுவைத்தனர். பின்னர் அவளும் ஒரு கவளத்தைத் தன் வாய்க்குள் திணித்தாள். அவ்வுணவு தொண்டைக்குழியினுள் இறங்காததால் விக்கினாள். அந்த அதிகாரி ஒரு தம்ளர் தண்ணீரைக் கொடுத்து தன் மனிதநேயத்தை வெளிப்படுத்தினார்.



www.surabooks.com



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**தோட்டக்காரனின் புலம்பல்:**

அதிகாரி, தோட்டக்காரனிடம் விளைச்சலின்றிக் காய்ந்துபோன திராட்சைத்தோட்டத்தைப் பற்றிக் கேட்டுக்கொண்டே கையில் இருந்த உணவைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். தோட்டக்காரன் தன் முதலாளியின் செயலைச் சொல்லிப் புலம்பினான்.

**தோட்டக்காரரின் மனைவியின் செயல்கள்:**

அதிகாரி சாப்பிட்டுக்கொண்டிருந்த போது அங்கிருந்த நாய்கள் அவரைச் சாப்பிடவிடவில்லை. அதிகாரி அந்நாய்களுக்குக் கொஞ்சம் கொடுத்தபடி இருந்தார். அதனைப் பார்த்த தோட்டக்காரரின் மனைவி அந்நாய் மீது கல் எடுத்து அடித்தாள். மற்றொரு நாய் மீது ஒரு மண்கட்டி எடுத்து அடித்தாள். அவை உடனே திராட்சைத் தோட்டத்திற்குள் ஓடிவிட்டன.

**ஏழைத்தாயின் தாய்மைக்குணம்:**

அத்தாய் உணவை ஆவலோடு வாய்க்குள் போட்டாள். சுவை நாவில் இறங்குவதற்கு முன் அந்நாயின் ஓல ஓலி அவளை இழுத்தது. தட்டைக் கீழே வைத்துவிட்டு அந்நாய்க்குட்டியைத் தேடிப் போனாள். அக்குட்டி ஈனமுனகலாய்க் கிடந்தது. அவளைப் பார்த்ததும் வாலாட்டியது. அவள் நாய்க்குட்டியை வாரி எடுத்தாள்.அதைத் தாலாட்டினாள், தட்டில் இருந்த உணவைக் கவளம் கவளமாய் உருட்டி அந்தச் சின்னக் குட்டிக்கு ஊட்டினாள்.

**முடிவுரை:**

அந்தத் தட்டில் இருந்த உணவு குறையக் குறைய அவள் தாய்மை கூடிக்கொண்டே இருந்தது. எது வறண்டாலும் மனிதத்திற்கு வறட்சி இல்லை என்பதை இக்கதையின் மூலம் உணர்த்துகிறார் ஆசிரியர்.

☆☆☆



www.surabooks.com



Click Here: https://bit.ly/3qEjvjI Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores




இயல் 9

அன்பென்னும் அறனே | கற்கண்டு

# அணியிலக்கணம்

## மன வரைபடம்








Click Here: https://bit.ly/3qEjvjl
Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



## மதிப்பீடு

### பலவுள் தெரிக

1. **கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி?**
அ) சொல் பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி
இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப் புகழ்ச்சியணி **விடை: ஆ) பொருள் பின்வருநிலையணி**

### குறுவினா

1. **நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன். இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.**
கவித்தேன் – உருவகம்

### சிறுவினா

1. **உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**
கவிஞன் தான் ஒரு பொருளைச் சிறப்பிக்க எண்ணி அதற்கு உவமையாகும் வேறொரு பொருளோடு ஒன்றுபடுத்திக் கூறுவது உருவக அணி ஆகும். உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும்.
**(எ.கா.)**
இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.
இப்பாடலில் இன்சொல் – நிலமாகவும், வன்சொல் – களையாகவும், வாய்மை – எருவாகவும், அன்பு – நீராகவும், அறம்– கதிராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

## கூடுதல் வினாக்கள்

**அ) சான்று தருக.**

1. **உவமை அணி**
அ) இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.
ஆ) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.
இ) கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.
ஈ) தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. **விடை: அ)**

2. **உருவக அணி**
அ) தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.
ஆ) தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்
இ) துன்பக் கடல் இன்ப வெள்ளம்
ஈ) விண் தடவு கோபுரம் **விடை: இ)**

இயல் 9



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**3. சொற்பொருள் பின்வருநிலை அணி**

அ) எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

ஆ) கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

இ) அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
கொண்டன காந்தள் குலை

ஈ) பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவர் புகழ்வர், செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே

**விடை:** அ)

**4. வஞ்சப் புகழ்ச்சி அணி**

அ) துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை

ஆ) தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

இ) பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவ னடிசேரா தார்

ஈ) மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

**விடை:** ஆ)

**ஆ) நிரப்புக**

**1. செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது .............. இலக்கணம் ஆகும்.**

அ) பொருள் ஆ) யாப்பு இ) அணி ஈ) சொல்

**விடை:** இ) அணி

**2. அணிகளில் இன்றியமையாதது .............. ஆகும்.**

அ) பின்வருநிலையணி ஆ) உவமையணி
இ) வஞ்சப்புகழ்ச்சியணி ஈ) உருவக அணி

**விடை:** ஆ) உவமையணி

**3. உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது .............. அணி ஆகும்.**

அ) தற்குறிப்பேற்ற அணி ஆ) உவமையணி
இ) உருவக அணி ஈ) இயல்பு நவிற்சி அணி

**விடை:** இ) உருவக அணி

**4. செய்யுளில் முன் வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து வேறு பொருள் உணர்த்துவது .............. அணியாகும்.**

அ) சொல்பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி
இ) சொற்பொருள்பின்வருநிலையணி ஈ) ஏகதேச உருவக அணி

**விடை:** அ) சொல்பின்வருநிலையணி

**5. செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பல இடங்களிலும் வருவது அணி .............. ஆகும்.**

அ) உருவக அணி
ஆ) சொற்பொருள் பின்வருநிலைஅணி
இ) சொல் பின்வருநிலையணி
ஈ) நிரல் நிறை அணி

**விடை:** ஆ) சொற்பொருள் பின்வருநிலை அணி



www.surabooks.com



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores





**இ) சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க**

1. அ) செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது கவிதை எனப்படும்.
   ஆ) செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது அணி எனப்படும்.
   இ) செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது புதுக்கவிதை எனப்படும்.
   ஈ) செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது இலக்கியம் எனப்படும்.

   **விடை: ஆ) செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது அணி எனப்படும்.**

2. அ) பின்வருநிலையணி இரண்டு வகைப்படும்.
   ஆ) பின்வருநிலையணி மூன்று வகைப்படும்.
   இ) பின்வருநிலையணி நான்கு வகைப்படும்.
   ஈ) பின்வருநிலையணி ஐந்து வகைப்படும்.

   **விடை: ஆ) பின்வருநிலையணி மூன்று வகைப்படும்.**

3. அ) செய்யுளில் முன்வந்த ஒரு சொல்லின் பொருளே பின்னரும் பல இடங்களில் வருவது சொல் பின்வருநிலை அணி ஆகும்.
   ஆ) செய்யுளில் முன்வந்த ஒரு சொல்லின் பொருளே பின்னரும் பல இடங்களில் வருவது பொருள் பின்வருநிலை அணி ஆகும்.
   இ) செய்யுளில் முன்வந்த ஒரு சொல்லின் பொருளே பின்னரும் பல இடங்களில் வருவது உவமை அணி ஆகும்.
   ஈ) செய்யுளில் முன் வந்த ஒரு சொல்லின் பொருளே பின்னரும் பல இடங்களில் வருவது உருவக அணி ஆகும்.

   **விடை: ஆ) செய்யுளில் முன்வந்த ஒரு சொல்லின் பொருளே பின்னரும் பல இடங்களில் வருவது பொருள் பின்வருநிலை அணி ஆகும்.**

4. அ) புகழ்வது போலப் பழிப்பதும் பழிப்பது போலப் புகழ்வதும் தற்குறிப்பேற்ற அணி ஆகும்.
   ஆ) புகழ்வது போலப் பழிப்பதும் பழிப்பது போலப் புகழ்வதும் பின்வருநிலை அணி ஆகும்.
   இ) புகழ்வது போலப் பழிப்பதும் பழிப்பது போலப் புகழ்வதும் உவமை அணி ஆகும்.
   ஈ) புகழ்வது போலப் பழிப்பதும் பழிப்பது போலப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும்.

   **விடை: ஈ) புகழ்வது போலப் பழிப்பதும் பழிப்பது போலப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும்.**

5. அ) உவம உருபு வெளிப்படையாக வருவது உருவக அணி ஆகும்.
   ஆ) உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.
   இ) உவம உருபு வெளிப்படையாக வருவது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.
   ஈ) உவம உருபு வெளிப்படையாக வருவது ஏகதேச உருவக அணி ஆகும்.

   **விடை: ஈ) உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.**

6. அ) உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும்.
   ஆ) உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது உவமையணி ஆகும்.
   இ) உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது பின்வருநிலையணி ஆகும்.
   ஈ) உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

   **விடை: அ) உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும்.**

## சிறுவினா

1. **பின்வருநிலை அணிகள் பற்றி விளக்குக.**
   ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ மீண்டும் மீண்டும் வருதலே பின்வருநிலை அணியாகும். இது மூன்று வகைப்படும்.



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



1. **சொல் பின்வருநிலையணி :**

**அணி விளக்கம் :** முன் வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து வேறு பொருள் உணர்த்துவது சொல் பின்வருநிலை அணியாகும்.

**அணி அமைந்த பாடல்:** துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

**அணி பொருத்தம் :** இக்குறளில் 'துப்பு' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து வேறு வேறு பொருள்களைத் தருகிறது. துப்பார்க்கு – உண்பவர்க்கு; துப்பு – நல்ல, நன்மை; துப்பு – உணவு என்று பல பொருள்களில் வந்துள்ளது.

2. **பொருள் பின்வருநிலையணி :**

**அணி விளக்கம் :** செய்யுளில் முன்வந்த ஒரு சொல்லின் பொருளே பின்னரும் பல இடங்களில் வருவது பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**அணி அமைந்த பாடல்:** அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை – மகிழ்ந்திகழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை.

**அணி பொருத்தம் :** இச்செய்யுளில் அவிழ்ந்தன, அலர்ந்தன, நெகிழ்ந்தன, விண்டன, விரிந்தன, கொண்டன ஆகிய சொற்கள் மலர்ந்தன என்ற ஒரு பொருளையே தருவது பொருள்பின்வருநிலையணி ஆகும்.

3. **சொற்பொருள் பின்வருநிலையணி :**

**அணி விளக்கம் :** முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர் பல இடங்களிலும் வருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**அணி அமைந்த பாடல்:** எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

**அணி பொருத்தம் :** இக்குறட்பாவில் 'விளக்கு' என்னும் சொல் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

2. **வஞ்சப்புகழ்ச்சியணியை விளக்குக.**

**அணி விளக்கம் :** வஞ்சப்புகழ்ச்சியணி என்பது புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதுமாகும்.

**அணி அமைந்த பாடல் :** தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

**அணி பொருத்தம் :** கயவர்கள் தேவர்களுக்கு ஒப்பானவர்கள் என்று புகழப்படுவது போலத் தோன்றினாலும், கயவர்கள் இழிந்த செயல்களையே செய்வர் என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்துகிறது. எனவே, இது புகழ்வது போலப் பழிப்பது ஆகும்.

☆☆☆

அன்பென்னும் அறனே

www.surabooks.com



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



# அலகுத் தேர்வு

**கால அளவு : 1.30 மணி** **மதிப்பெண்கள் : 40**

**I. பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.** (5 × 1 = 5)

சங்ககாலத்தில் வாழ்ந்த நல்லிசைப் புலவர் பிசிராந்தையார். இவர் பாண்டிய நாட்டில் பிசிர் என்னும் ஊரில் வாழ்ந்தவர். மன்னனுக்கு வேண்டும் காலத்து அறிவுரை கூறி அவனைச் செம்மைப்படுத்தியவர். சோழநாட்டைக் கோப்பெருஞ்சோழன் ஆட்சி புரிந்து வந்தான். இருவரும் ஒருவரையொருவர் காணாமலே உணர்ச்சி ஒன்றி நட்புக் கொண்டனர்.

கோப்பெருஞ்சோழன் சான்றோர் பலர் சூழ ஆட்சி புரிந்து வந்தான். அவன் மக்கள் இருவர் தந்தையுடன் மாறுபட்டு, அரியணையைக் கைப்பற்றப் படை திரட்டிப் போரிடத் திட்டமிட்டனர். சோழன் சீறி எழுந்தான். புல்லாற்றூர் எயிற்றியனார் அறிவுரையால் சீற்றம் தணிந்த கோப்பெருஞ்சோழன், தன் மக்களை வெறுத்தான். எனவே வடக்கிருந்து உயிர் விடத் துணிந்தான். சான்றோர் பலர் உடன் வடக்கிருந்தனர். பிசிராந்தையாருக்கு ஓர் இடம் ஒதுக்குமாறு மன்னன் கூறினான். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்விட்ட பின் நடுகல் எடுத்து எல்லோரும் வழிபட்டனர். அவ்வேளையில் கோப்பெருஞ்சோழனைக் காணப் பிசிராந்தையார் வந்தார். எல்லாரும் வியப்புற்றனர். நடந்த செய்தி அறிந்த பிசிராந்தையார் வடக்கிருந்து உயிர் துறந்தார். இதனால் இருவரும் நட்பின் இமயமாய் இலங்கிய பாங்கினை அறியலாம்.

**வினாக்கள்:**

1. பிசிராந்தையார் வாழ்ந்த காலம் எது?
   அ) இருண்டகாலம் ஆ) பொற்காலம் இ) சங்ககாலம் ஈ) தற்காலம்
2. சோழநாட்டின் தலைநகரம் எது?
   அ) மதுரை ஆ) திண்டுக்கல் இ) திருவாரூர் ஈ) உறையூர்
3. கோப்பெருஞ்சோழனிடம் போரிட்டவர்கள் யார்?
   அ) சேர மன்னன் ஆ) கோப்பெருஞ்சோழனின் மகன்கள்
   இ) சோழநாட்டு மக்கள் ஈ) பாண்டிய மன்னன்
4. கோப்பெருஞ்சோழனின் கோபத்தைத் தணித்த புலவர் யார்?
   அ) பிசிராந்தையார் ஆ) பரணர் இ) ஔவையார் ஈ) புல்லாற்றூர் எயிற்றியனார்
5. வடக்கிருந்து உயிர்விட்ட மன்னன் யார்?
   அ) கோப்பெருஞ்சோழன் ஆ) அதியமான் இ) நெடுஞ்செழியன் ஈ) நற்கிள்ளி

**II. சான்று தருக.** (1 × 1 = 1)

1. **உவமை அணி**
   அ) இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.
   ஆ) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு.
   இ) கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால் தோட்கப் படாத செவி.
   ஈ) தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு.

**III. நிரப்புக.** (1 × 1 = 1)

1. **செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது .............. இலக்கணம் ஆகும்.**
   அ) பொருள் ஆ) யாப்பு இ) அணி ஈ) சொல்

**IV. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க** (1 × 1 = 1)

1. அ) பின்வருநிலையணி இரண்டு வகைப்படும்.
   ஆ) பின்வருநிலையணி மூன்று வகைப்படும்.
   இ) பின்வருநிலையணி நான்கு வகைப்படும்.
   ஈ) பின்வருநிலையணி ஐந்து வகைப்படும்.

**V. பின்வரும் செய்யுட் பகுதியைப்படித்து அதனைத் தொடர்ந்துவரும் பல்விடை வினாக்களுக்கு உரியவிடைகளை எழுதுக.** (5 × 1 = 5)

நசை பெரிது உடையர்; நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி அவர் சென்ற ஆறே.



Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**வினாக்கள்:**

1. இப்பாடல் வரிகள் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) குறுந்தொகை ஈ) நற்றிணை
2. இப்பாடலை இயற்றியவர் யார்?
அ) உருத்திரங்கண்ணனார் ஆ) பாலை பாடிய பெருங்கடுங்கோ
இ) நல்லந்துவனார் ஈ) கூடலூர் கிழார்
3. களைஇய - இலக்கணக்குறிப்பு தருக
அ) இசைநிறை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை
4. நசை என்பதன் பொருள் யாது?
அ) வியப்பு ஆ) மகிழ்ச்சி இ) விருப்பம் ஈ) புன்னகை
5. இப்பாடல் எந்தத் திணைக்குரியது?
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) பாலை

**VI. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள்தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.** (5 × 1 = 5)

சௌனக்கா என்னும் தத்துவ ஞானி கூறியதாவது; ''எல்லாருடைய நாடுகளும் தாய்நாடு என்றும் நம் நாடு எல்லா மக்களுக்கும் தாய் நாடு என்றும் நாம் கருதுதல் வேண்டும்.'' மார்க்ஸ் அரேலியஸ் என்னும் பேரரசர் கூறியதாவது ''நான் பகுத்தறிவும் கூட்டுறவும் உடையவன்; நான் அன்டோநீனஸ் ஆதலால் உரோமுக்கு உரியவன் நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன். இவ்வாறு உலக மாந்தரின் ஒற்றுமைத்தன்மை மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளது. மக்கள் அனைவரும் மக்கட்தன்மையை வளர்க்க வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட நூல் திருக்குறள். ஜி.யு.போப் திருவள்ளுவரை உலகப் புலவர் என்று போற்றுவது மிகவும் பொருத்தமானதாகும். உரோம நாட்டவர் எழுதும்போது நாம், "நம்மவர்" என்ற செருக்கோடு உரோமரைக் கருதியே எழுதுகின்றனர். வள்ளுவரோ எல்லா உலகிற்கும் எல்லா மாந்தர்க்கும் பயன்படும் வகையில் உலகமெல்லாம் தழுவுவதற்குரிய பான்மையில் தம் நூலை யாத்துள்ளார்.

**வினாக்கள்:**

1. எல்லாருடைய நாடுகளும் நமக்குத் தாய்நாடு என்று கூறியவர் யார்?
அ) சௌனக்கா ஆ) திருவள்ளுவர் இ) கம்பர் ஈ) கணியன் பூங்குன்றனார்
2. நான் அன்டோநீனஸ் ஆதலால் உரோமுக்கு உரியவன்; நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன் என்று கூறியவர் யார்?
அ) சௌனக்கா ஆ) ஜி.யு.போப் இ) கோர்டன் ஆல்போர்ட் ஈ) மார்க்ஸ் அரேலியஸ்
3. ஜி.யு.போப் திருவள்ளுவரை எவ்வாறு போற்றுகிறார்?
அ) தமிழ்ப் புலவர் ஆ) பெரும்புலவர் இ) உலகப் புலவர் ஈ) சிறந்த புலவர்
4. உரோம நாட்டவர் எழுதும்போது யாரைக் கருதி எழுதுகின்றனர்?
அ) உலக மக்களை ஆ) உரோமரை இ) மன்னரை ஈ) தொழிலாளியை
5. உலக மக்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் நூலை எழுதியவர் யார்?
அ) ஜி.யு.போப் ஆ) பாரதியார் இ) திருவள்ளுவர் ஈ) தனிநாயகம் அடிகள்

**VII. பின்வரும் செய்யுள் வினாக்களுக்குச் சுருக்கமான விடையளி. (ஏதேனும் ஒன்று)** (1 × 4 = 4)

1. கல்யாண்ஜி குறிப்பு எழுதுக.
2. குறுந்தொகை குறிப்பு வரைக.

**VIII. பின்வரும் உரைநடை வினாக்களுக்கு விரிவான விடையளி. (ஏதேனும் ஒன்று)** (1 × 5 = 5)

1. இலக்கணத்தில் பரந்த மனப்பான்மையை விவரி.
2. நன்மை நன்மைக்காகவே தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகளை எழுதுக.

**IX. ஒரு பக்க அளவில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.** (1 × 7 = 7)

1. 'தாய்மைக்கு வறட்சி இல்லை' இக்கதையை கட்டுரை வடிவில் தருக.

**X. கடிதம் எழுதுக.** (1 × 6 = 6)

1. வகுப்பில் நீங்கள் தேர்ந்தெடுத்த நண்பரின் சிறந்த பண்பைப் பாராட்டியும் அவர் மாற்றிக் கொள்ள வேண்டிய பண்பைப் பற்றியும் பெயரைக் குறிப்பிடாமல் கடிதமாக எழுதிப் படித்துக் காட்டுக.

☆☆☆





Click Here: https://bit.ly/3qEjvjl Ph: 9600175757 / 8124201000